வாங்கி மற்ற எல்லா ஆய்வுகளையும் செய்கிற அந்தக் காலத்தைத் தான் இவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி இப்போது நமக்குக் கிடைத்து விட்டது. எனவே, அந்த வேலையைத் துவக்குவதற்கு எந்தத் தடையும் இல்லை.

மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்தல்.

545—(*வினா எண் 11631) திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்தி இரண்டு பேருந்துகள் மாறி செல்லும் பாலமாக மாற்றும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. என். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்த்தஞ்சை மாவட்டத்தின் ஏறத்தாழ பாதிக்கு மேற்பட்ட பகுதிகளுக்கு தஞ்சையிலிருந்து செல்ல வேண்டுமென்றால், இந்த மன்னார்குடி கீழ்ப்பாலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, பஸ் போக்குவரத்துக்கும், மற்றப் போக்குவரத்துகளுக்கும் இடையூறாக இருப்பதால் அந்த மன்னார்குடி கீழ்ப்பாலத்தை அகலப்படுத்த இந்த ஆண்டாவது அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகப் பழைய பாலமாக இருக்கிறது. எனவே. அதை அகலப்படுத்துவது என்பது சரியாக இருக்காது. புதிய பாலம் தான் கட்டவேண்டியிருக்கிறது. அதற்கு 42 லட்ச ரூபாய் ஆகும் என்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்துக்கொள்ள நிதிவசதி இல்லாத காரணத்தினால் வருகிற ஆண்டிலே அதைப்பற்றி யோசிக்கலாம்.

1987 ஏப்ரல் 29]

திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்னார்குடி கீழ்ப்பாலமானது கீழ்த் தஞ்சைப் போக்குவரத்துக்கு மிகவும் முக்கியமானதாக அமைந்திருக்கிறது. அதை மாற்றி புதிய பாலம் கட்டவேண்டுமென்று நீண்ட நாட்களாக வற்புறுத்தி வந்தும் மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே பரிந்துரை செய்தும் இதுவரையில் அது கட்டப்படவில்லை. எனவே வருகிற ஆண்டிலேயாவது புதிய பாலத்தைக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா? அதைப் போலவே மன்னார்குடி-திருவாரூர் சாலையை இருவழிச் சாலையாக ஆக்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருந்தாலும், இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கக் கூடியவைகள் மிகவும் முக்கியமானவைகள் என்று எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆர்வம் இருந்தாலும் நிதிப் பற்றாக்குறை காரணத்தினால் எடுத்துக்கொள்ளவில்லை. வருகிற ஆண்டிலே பரிசீலனை செய்யலாம் என்று நான் ஏற்கனவே சொன்னேன். வருகிற ஆண்டிலே அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்னார்குடி கீழ்ப்பாலமானது மிகவும் பழைய பாலமாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு 42 இலட்ச ரூபாய் செலவு செய்யவேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ளவிரும்புவது, அந்தப் பாலம் பழைய பாலமாக இருக்கிற காரணத்தினால் அதிலே ஏதாவது பழுது ஏற்பட்டால் அல்லது அது உடைந்துவிட்டால், சீர்காழியிலிருந்தோ அல்லது பட்டுக்கோட்டையிலிருந்தோ மன்னார்குடிக்குச் செல்லவேண்டுமென்றால் அந்தப் பாலம் வழியாகத்தான் செல்லவேண்டும்— நிச்சயமாக போக்குவரத்து துண்டிக்கப்பட்டுவிடும். ஆகவே,

அதன் அவசியம் கருதி உடனடியாக இந்த ஆண்டாவது அதை எடுத்துக் கொண்டு அந்தப் பகுதியிலே போக்குவரத்து தடை ஏற்படும் நிலைமை ஏற்படாமல் நிவர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே எடுத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இல்லை. காரணம், திட்டங்கள் தீட்டப்பட்டு பணம் ஒதுக்கப்பட்டு விட்டது பல்வேறு காரியங்களுக்காக. ஆகவே அதை எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பில்லை. வருகிற ஆண்டிலே எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்தேன். எடுத்துக் கொள்வதற்கு முன் இடையூறு ஏற்பட்டால், தற்காலிக மாக மாற்றுவழி ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறேன். என்வே அந்த அச்சம் தேவையில்லை என்று கருதுகிறேன். எதிர்காலத்திலே அதைப்பற்றி தீவிரமாக ஆலோசித்து முடிவு எடுக்கலாம்.

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுளி ஒன்றியம், நத்தம் அருகே ஆற்றின் குறுக்கே பாலம்.

546—(* வினா எண் 12326) திரு. வெ. சொ. பஞ்சவர்ணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி திருச்சுளி ஒன்றியம் பரளச்சி-வடக்கு நத்தம் சாலையில் வடக்கு நத்தம் அருகே ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (இ) வினாவில் குறிப்பிடப் படும் பணியினை ரூ. 5.00 இலட்சம் செலவில் எடுத்துச் செய்ய 1987-88 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் சேர்க்க **பரிந்துரைக்கப்பட்டுள்ளது.**